ஆர். ஜி. நாயுடு,
எழும்பூர், சென்னை.
"கை முறை வைத்தியம்". 1/E + 2/E.

134

தேதி: 6.4.64.
ஓலைச்சுவடியின் பெயர்:- "கை முறை வைத்தியம்"
உரிமையாளரின் பெயர்: ஆர்.ஜி.நாயுடு.
இடம்: எழும்பூர், சென்னை.

ஃஃஃ

<u>சகல வியாதிகள் தீர:</u>

போச்சென்று மலையாதே மருந்து கேளு புதுக் கலசந் தோண்டியைப் போல் ரெண்டு வாங்கி
மேச்சென்ற தோண்டிக்குள் பூசக் கேளு மெழுவான பருத்திபிலைச் சாறு பூசு
வாச்சென்ற ரவி தனிலே ஊறப் போடு வட்டோடு கட்டி நன்றாய் குப்பி மேல் வைத்து
காச்சென்ற சூதமோர் பலமு நாலு தனிக் கெந்தி நெல்லி நிறம் பலமுமொன்று
காச்சென்ற கல்வத்தில் பொடித்து ஒட்டில் சுசுகசென்று பிடியாமல் மெள்ளத் தாவே.

2. தாவி மெள்ளத் தீ யெரிக்க வுருகும் பாரு தட்டி யில்லா தரிசினுக் கால் சூடம்
தாவி மெள்ள வுருக விட்டு யிரும்பு கொண்டு பத்திரமாய்க் கிண்டு கிண்டு பொடியா
தேவியோட்ட சிவறுமொன்றாய்ச் சேர்ந்தால் பின்னுங் கேள் திரளாது உகிர்ந்து பொடிசுருப்பாய் நிற்
சீவி மெள்ள புரண்டி நன்றாய்க் கொட்டிக் கல்வஞ் சிதறாமல் பொடித்து ஒரு தோண்டியில் போடே.

3. போட்டு மறு சாறு பூசி தோண்டி தன்னை பொருந்த மெள்ளக் கவுழ்த்து மூடிச் சந்து வாய்க்கு
யாட்டி நன்றாய் உருந்தரைத்து வெண் கருவை விட்டு ஆற வளைச் சீலை செய்வாய் மூன்று போதும்
வாட்டி நன்றாய் யுலர்ந்த பின்பு வாலுகுப்பிலேத்தி வரிசையாய் முத்தீயு மூன்று சாமம்
கூட்டி நன்றாய் ஆறின பின் யிறக்கு மெள்ள குடந் திறந்து பார்க்கவுந் தான் பதங்கியாமே.

4. பதங்கமெல்லாம் வழித்து வைப்பாய் குப்பிக் கேற்ற பசிரதியாங் கெங்கா சலக் குப்பி வேணும்
சேதங்கள் வராமல் சீலை செய்து திரும்பவுந் தாறுலர வேழுஞ் செய்து
விதங்கள் விரல் லெண்டங்குலம் வைத்து வெளியில் பலத்த திரி கொளுத்தி வாட்டு சத்
அச்சங்கள் வராமல் வேன் பார்த்து அப்பனே நீர் விட்டு விரலால் தட்டே.

5. தட்டி விடு கழுத்தறுத்தாப் போலாம் குப்பி தனிப் பதங்கம் வாரியிட்டுத் தாளிக்குள்ளே
கொட்டிவிடு ரெண்டங்குலம் மணலைப் பார்த்து சூடந் தாசி யன்றி லதில் குப்பி வைத்
விட்டுவிடு சுத்தி மெள்ள மணலை நீ தான் வீத்திருந்த குப்பிக்குள் விழ கொள்ளுது
சுட்டறுத்த குப்பி மட்டும் யிட்டு மைந்தா சுந்தரஞ் சேர் வாலுகுப்பி லேத்திடாயே.

6. யெத்தி நன்றாய் சிவகாமி பூசை செய்வாய் யென் மகனே வாமத்தால் தொடுப்பு ரேசி
சாத்து நன்றாய் பரிமளங்கள் தாப தீபஞ் சந்திர கலையியங்கி வரில் சாமம் பூரி
பார்த்து மட்டாக யெரித்து விடு முத்தீயு மெள்ள பதங்க மெல்லா முருகி குப்பி பண்டிக் கேறத்
சூர்த்தறிவாய் தொழிலொன்று சொல்லக் கேளு குப்பிக்குள் பதங்கமது உருகும் போ

7. உருகி வரும் பதந் தனிலே சிலாகை யிட்டா லுருளாமல் குழம்பு போல் நிற்கும் நேரே
சேர் சீன மரை யெடுத்து பொடித்துப் போட்டு சுத்த வெள்ளைப் படிக மென்ன தேங்காய் போலிம்
வருகுஞ் சீனமன்றி வைப்பார் லோகத் தோர்கள் வாய்ப் புண்ணு முமிநீர் சுத்து பிறக்க வொட்டாது
கருவிதான் குத்திரத்தில் மறப்போ யில்லை காட்டாதே ளிர்ந்த பின்பு உடைத்து வாங்கே.

<u>காலாந்த கெவுரி ரசகற்பூரம்:-</u>

8. வாங்கிடுவாய் சுருக்கு மெத்த ரசகற்பூரம் வைப்பறிந்தால் வாதியவன் மட்டோயில்லை
தாங்கியிந்த கற்பூரம் நோய்கள் தீர்ந்தால் தருகாது வாயிலையும் கட்டறுது கேள்
பாங்கறியச் செய்தவனே வயித்தியனுமான் பாரினில் தான் சொல்லுகிறேன் பதங்கப் போக்கு
வோங்கி நின்ற ரசமது தான் பலமாம் ரெண்டு உத்த கெந்தி அரிதாரம் வெள்ளை வீரம்.

9. வெள்ளையென்ற வீரமுடன் அருசு காந்தம் வீச மஞ்சள் கெவுரி லிங்கம் மனோசிலை நேராய்
கொள்ளையப்பா பத்து வகை மருந்தொன்றுக்கு கழஞ்சு கழஞ்சு ரெண்டாய் நிறுத்துக் கல்வம்
பிள்ளையுந் தாய் பொருந்திறப் போல் தாளி ரெண்டில் பிலமான தாளி யொன்றி லப்பரைத்துச் செம்பி
யுள்ளே விரலஞ்சது தான் செம்பி நடுமைய்ய முக்கமனே குளித்துக் கல்வங் கொட்டி மருந்தியே.

10. அரைக்கனமோ வெள்ளைக் கருவை யரைத்துக் காலொன்றில் விட்டு
மறக்கும் பால் துள்ளி விட்டால் தெளிந்து சிலமாகும்
கரைக்க வதி விட்டாட்டிக் குகையுஞ் சில்லுங் கனமாகச் செய்துலத்தி உப்பில் நடு
வைத்து அரைக் குருவாஞ் சுதமதைக் குகை தனிலிட்டு நறந்கிராமல் சில்லு மூடி

நாசியில்லாதுப்பை நிறைக்க மணியாய்க் கொளித்து நின்ற குகை மேலே
நிறையயிட்டு யெட்டங்கலம் நீ கவிழ்த்த மூடே மூடுகின்ற தாளிக்குள் கரிப்பான் சாறு
முறையாக அஞ்சு திரமுலத்தி நன்றாய் மூடி 'சாடி' புகை தெரிந்திடாமல் சந்து வாயில்
மண்ணை
சல்லாது போல் பாளமதில் தடவிச் சீலையேழு செய்து வாடி யுலர் வெடித்திடத்தில்
மறுபடியு மண்ணை வாரிப் பூசி யுலர்த்தி யெடு வாலடுப்பிலேற்றி ஆனி ஆடி ஆவணி
புரட்டாதியு மாகும் அப்பனே யெத்து முறைக்கிது மாதம் நாலே.

நாலெனவே சாமமெரி முக்தீயு மட்டாய் நன்றாகுங் கற்பூரம் களி நிறம் போலாகும்
பாலெனவே வெள் சிவப்பாய் நிறமுமாகும் பதனமா யிறக்கி பன்றி மூடியிலேலே வளித்து
காலனையுங் கச்சி மெள்ள முடித்து விடும் பூரம் காலாந்த கெவுரி ரச கற்பூரம்
பேர் தான்
வளெனவே வரும் நோய்க்கு யிதிலே யொரு களஞ்சி யுருதி முன் வெள்ளைக் கற்பூரங்
களஞ்சே
களஞ்சு ரெண்டு மெடுத்து மை போல் பணவிடையாந் தேனில் கருப்புக் கட்டி சர்க்கரையாம்
வெண்ணை பொரி மாவில் சலந் திரண்டு ஒருவிருந்த அரியாப்புச் சூலை
தாறுமாறாய் வெடித்த குட்டம் பவுத்திரம் தனி விரல்கள் குறையும் வளைத்த வில்
போல்ச் சூலை முடக்கு வயக்கு வலி குன்மம் வாத மென்ற விடு நீரால் தடிப்பு
பற்று விரியும் விளைந்ததடா நோய் தீரும் விப்ர மெத்தவுண்டு வினை யறிவான்
வயித்தியற்கு வதித்திந்த நாலே.

நாலென்றுலரிமை மெத்த நரிந்த பாரு நரைமையாய் செய் கொழில முறையுந்
தோணும்
நாலென்றுல் கருக்கருவுஞ் சரக்குந் தோணும் நாக்கள் சாரமறிந்நாட்டத் தோணும்

நாலென்றுல் வகை வகையாய் செய்யத் தோணும் நாலெழுதி வைப்பார் களிந்து போவார்
இறந்து விட்டாலேதண்டா மண்ணுண்டாச்சு யிந்தறிவு பின் வருமென்றென்ன வேண்டாம்
வறந்திடவே நூல் பார்த்து மகிமை யென்ன மருத்து வந்தானென்ன யினிமாடென்பார்கள்
நிறைந்திட்ட வேதாந்தஞ் சித்தாந்தம் ரெண்டும் நிற்கையிலு மிருக்கையிலும் நடக்கையிலும்
பார்த்து திறந்திட்ட மறிந்துணர்ந்து சித்தாந்தத்தில் திரும்பறிந்தால் வேதாந்தந்
திறந்தான் காணே.

<u>நீலகண்ட பதங்க ரசகற்பூரம்:-</u>

திறமான பதங்கியொன்று சொல்லக் கேளு சித்தர் செய்வார் ரிஷிகள் செய்வார்
மற்றோர் காணேன்
திறமான லிங்கமது குப்பியாக நிறுத்திடுவாய் நாலு பலம் நறுக்குக் கட்டி
யறமான மூலைப் பாலைச் சுருக்குத் தாக்கு அனல் முகத்தில் காலப் படியுமான பின்பு
தறமான தாளி ரெண்டில் ஒன்றுக்குள்ளே தனி மூலி சித்திர மொன்றுஞ் சாறு பூசே.

பூசிடுவா யெழுதரம் போட்டெல்லாமல் புத்தோடு முப்புஞ் சமனிடித்து மை போல்
வாசி பெறத் தாளிக்குள் சொரிந்து செம்மி வலுவான சித்திரமூலி பொடியுந் தூவி
காசி புகழின் சரக்கு அரிதாரம் வீரம் கடிய கெந்தி மனோசிலையுங் கற்பூர மிரண்டும்
தோசிகளாம் வெத்தியற்குச் சொல்லப் போமோ.
நரிசு வெள்ளை கெவுரி சீனந் துத்தநாகம் நாகமுடன் வங்கம் வெடியுப்பு முவற்பூவும்
நலமான குடன் பதினைந்து மொகப்பு பாகமுடன் சரி சமமாய் களஞ்சி ரெண்டாய்
பழச் சாற்றலாட்டி மெள்ளப் பருமணியா யுலத்தி வேகமுடன் சுருக்கெரித்த லிங்கத்தில்
விரவி
வெத்தி பெறந் தாளியுப்பில் வேர் பொடியின் மேலே தாகமுடன் பார்த்து நன்றாய்
தாளியுப்பில் வேர் பொடியின் மேலே தாகமுடன் பார்த்து நன்றாய் தாளியுப்பை
மணியாய் தை வேளைச் சாற்றால் விரவி தாளி கொண்டு மூடே.

மூடிடுவாய் முன் பூசி யுலர்ந்த தாளி மூவிரண்டு மொன்று மண் செய்துலத்திக் கொண்டு
சாடிடுவா யடுப்பேத்திக் காடாக்கினியா மிரண்டு சமையாக் கமல மிரண்டு தீபம் ரெண்டு
மோடிடுவா யடுப்போட்டே யெரித்த சாமம் பூசை பண்ணி திறந்து பார் நீலகண்ட வாலை
கூடிடுவாய் பன்றி முடி கருஞ் சிவப்பாம் வன்னம் குருவிது தான் செனியாது குளம்பைக்
கேளே.

<u>கற்பூரங் கொள்ளக் குளம்பும் பத்தியமும்:-</u>

குளம்பென்ன செங்கொட்டை பறங்கிப் பட்டை கூர் முனையாம் பிரப்பம் வேர் வகை
யொன்றுக்கு
விளம்பினேன் பலமொன்று யிடித்து மைபோல் விட்டரைப்பாய் யாவின் நெய்யை மெழுகு
போலே
தளம்பின மாம் பச்சரிசி திரித்துக் கொண்டு தாறணியில் நோயாளிக் கீயும் போதும்
பலங்கனிந்த தேன் போலாங் குளம்பு காசு பாரு ந வெத்திலையில் வைத்து மாலே.

மாவுமொரு கர்சிடை தான் பணவிடை கற்பூரம் மத்திச்சு நாக்குளு லெடுத்தும் கொண்டு
மாவுபோல் பத்தியங் கார் புளியு முப்பும் பரு மரத்தும் வெள்ளிரை பருக்கிக் கொண்டு
நாவிறங்க ஆவின் நெய்யும் மோரும் பாலும் நலமான வெண்ணீரு மன்னப் பாலும்
தாவுகிற மழைத் துளி போல் வாசங் கொண்டு சுடச் சுடவே பத்தியங் கொள்ளுப்பைக்
கூட்டே.

கூட்டுவது கற்பூரம் வெந்தவுப்பு கொடுமையடா காரமெறிச் சுண்ணமாச்சு
காட்டுவது கறி வகைக்குக் கால் திட்டமாமே கசடான புகையிலையும் புளியுந் தள்ளி
யூட்டுவது வைத்தியனே யாலுல் கேரு யுத்த பிரமா வெனவே நூல்கள் சொல்லும்
யேட்டில் வைத்துச் செய்யாவில் மகத்தாம் பாவமென்ன சென்மம் விதியாளிக் கெய்தும்
வாறே.

வாறான மருந்துக்குத் தீரும் நோவை வைத்தியத்தி லடங்காது வருமா றின்றும்
பேறான வியாதி யென்ன பெருநீர் யேறிப் பித்த வாத சிலேற்பனமும் அதற்குள் வீழ்ந்து
செருக்குத் தசை யெலும்பு ரெத்தம் வெந்து தீய்ச் சுட்டால் போல் விரல்கள் புண்ணுமாகி
தீராத வியாதி யென்பான் நோய்கட்கெல்லாம் திமிரேத்திப் புணர்ச்சை யற்றுத் தடிப்பும் வீழ்ந்தே.

தடித்திடத்தில் சொறி வெடுக்கும் புண்ணும் பின்பு தலை முறைக்குங் குஷ்ட மென்பார் கிரந்தி யென்பார்
வெடித்த சூலை பதினெட்டுக் குஷ்டம் பதினெட்டும் விரிவு பத்தம் வெள்ளையொடு கரப்பு வெட்டும்
படித்துரைக்கும் யடிப்பிடித்த வள்ளை போலே பஞ்சிட்டுப் பாரம் வைத்தாப் போலாம் நோய்க்கு
அடிப்படையில் தண்ணீர் நின்று நீரும் மேறி யழகான சுவர் வீழ்ந்தவாறு தானே.

தானென்ற மருந்து கொள்ளும் நோய்கட் கெல்லாம் தவிடு பொடியாக்கி விடும் கற்பூரங்க
தேனென்ற கற்பூரங் கூட்டிக் கொள்ள திறமான சூரணத்தைச் செப்பக் கேளு
பானென்ற பட்டை பத்து லேசாய் வாங்கு பச்சை யிஞ்சி சாறரையிலா றப் போடு
கானென்ற கற்பூர வள்ளிச் சாறுங் கரந்தை குப்பை மேனியொடு தைவேளையின் சாறே.

சாறென்ற ஐந்து வகைக் கரைப் படியாய் விட்டுத் தனித் தனியே யுலர்ந்த பின்பு மிளகு பலம் பத்து
வாறென்றே வமுரியொடு கோமூத்திரங் கரிப்பான் வரிக் குமட்டி வெள்ளாட்டி நீருடனே யஞ்சும்
பாரென்றேன் வகைக்குப் படி யரையாய் வெவ்வேறே பரு மிளகிலிட்டு வைத்துப் பருவமாக
வேறென்ற சித்திர மூலி யிசங்கு கச்சல் வீளி சங்கங் குப்பியொடு வகைக்கு யஞ்சே.

அஞ்சாமல் தரித்திடித்து உலர்த்தி வெள்ளைர் அதிமதுரந் திப்பிலியும் அக்கிரக்காரம்
பஞ்சாகுஞ் சடாமாஞ்சி யரத்தை யேலம் பத்திரியுஞ் சாதிக்காய் கிராம்பு ஓமம்
அஞ்சாதே வால்மிளகு நக்கு மூலம் தட்டு மிரு சீரகமுஞ் சுக்கு நேராய்
மிஞ்சாமல் வகைக்குக் கால் பலமே கூட்டி மேலான மருந்து ரெண்டு மிடித்துத் தாளே.

தாளாக யிடித்து வடிகட்டிக் கொண்டு அய்யாவின் நெய் களஞ்சில் சூரணத்தைச் சே
தாளாதே வெருகடியைப் பிரட்டிப் புரந் தனிற் பணம் போலே வைத்துவதில் கொண்டா யாதல்
பாடான வியாதியெல்லாம் பறந்து போகும் பரப்பிரம நிட்ட வியாதி யல்லால் வேறு
கொள்வதொன்று மில்லை குட்டஞ் சூலை முடி கெடுத்த குன்ம வாய்வுக்குத்தும் போமே

போகுமே வாதமென்ற முடக்குத் தீரும் பொல்லாத கிரந்தி புண் கரப்பான் வண்டு
சாகுமே நீரும்பவிலிங்கச் சூலை தணியாத மகோதரமும் யோனிப் புத்தம்
வேகுமே பீனிசமாம் காச மெட்டும் விலவிடுத்த உணர்ச்சை யற்ற வியர் நீரெல்லாம்
யேகுமே யெண்ணிறந்த கோடி நோய்கள் யெத்தை யினி யாதுரைப் பேணிந்த நாலே.

யிந்த வழி கற்பூரம் மூன்றும் சொன்னேன் மேருத் கற்பூர மினி மேல்க் கேளு
மந்த கெதியானது வயித்தியற்கு மறலி வந்து அழைத்தாலும் மலை விருந்தாலு
மைந்தனே நின் நித்தம் சாபம் நீக்கி யெடுத்திடுவாய் மருந்து வகை யெல்லாஞ் சித்தி
வந்தனை செய்தாய் பதம் பூசை பண்ணி வடைமாலை வயிரவர்க்குச் சாத்துவாயே.

(வேறு நூல்) புலிப்பாணி வைத்தியம்

ரச கற்பூரம்:-

1. உகந்து கொள்க நிற்பதற்கு ரச கற்பூரம் உறுதியுடன் சொல்லுகிறேன் புலத்தியா கேள்
வகுத்து நின்ற திரிகடுகு வெந்தயமு மொன்றாய் மார்க்கமுடன் வகை மூன்று விராகன் நாக்கி
புகுந்து நின்ற மத்தகஞ் சாறு விட்டரைத்து பாலகனே குகை போலே பண்ணிக் கொண்டு
சுகந்த முள்ளரச கெந்த லிங்க மூன்றுஞ் சுத்த முடன் பொடி பண்ணிக் குகையில் போடே

2. போடப்பா சட்டி முக்காலுப்பைக் கொட்டி புத்தியுடன் அக்குகையைப் பதிய வைத்து
நாட்டப்பா மேற் சட்டி கொண்டு மூடி நலமாக மண்சீலை வலுவாய்ச் செய்து
சூடப்பா அனல் மூடி ஆறுசாமம் தப்பறவாய்த் தீ யெரித்து யெடுத்துப் பார்த்தால்
மூட்டப்பா மூடி நின்ற சட்டி மேலே முற்கமுள்ள ரச மாறப் பற்பமாச்சே.

3. ஆச்சப்பா பற்ப மென்ற ரசகற்பூரம் அப்பனே பக்குவமா யெடுத்துக் கொண்டு
வீச்சப்பா கிரந்தி முதல் குட்டத்துக்கு விசையான பவுத்திரமுஞ் சூலைக் கெல்லாம்
பாச்சப்பா சர்க்கரையில் பணவிடை கால் காணும் பறக்குமடா சகல விஷங்கள் ரோகமெல்லாம்
கர்ச்சப்பா புற மென்ற ரசகற்பூரம் கண்டவுடன் தீருமடா கருவாய்ப் பாரே.

4. பாரப்பா யின்னமொரு சூட்சங் கேளு பவுத்திர குடோரி யென்ற மூலந் தன்னை
காரப்பா யீருள்ளி, தும்பை, வேளை, கடுக்கவே தட்டியதை காட்டிடுக்கால்
வேரப்பா அத்தருவு மாறிப் போகும் விசையான மருந்துவும் பிசகோயில்லை
ஆரப்பா அறிவார்களிந்த மூலி அருமை வெகு யருமையடா அறிந்து பாரே.

5. சன்முக செந்தூரம்: வீர செந்தூரம்:- Doubtful
அயம் அரப்பொடி லிங்கம் சேர்த்து எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து ரவியில் வைக்க உத்தேசம். இரக்கு பலம் வரும்.

சுகபேதி:-

வீரந்தான் பேதியொன்று சொல்லக் கேளு விதமான சிவதை வேர் பசுவின் பாலில்
சீரந்தான் மிதக்க விட்டுச் சுண்டக் காய்ச்சி திறமாக உலத்தி யதைத் தாளாய்ப் பண்ணி

வாரந்தான் சரியெடை சர்க்கரையுஞ் சேர்த்து வளமாக ஏலமது அரைக்கால் சேர்த்து
பாரந்தான் வெருகடி தான் வெந்நீரில் கொள் பள்ள நற்சீத முதற் கழிந்து போமே.

<u>சகல மேகங்களுக்கு ரச கெந்தி மெழுகு</u>:- (போகர் முனி) புலிப்பாணி

பாரே நீ ரசகெந்தி ரசகற்பூரம் பண்பான அரிதாரம் ஊசிக் காந்தம்
சீரே நீ துரிசு துத்த மிருதார் சிங்கி சிறப்பான சுக்குடனே ஓம மஞ்சள்
வாரே திப்பிலியும் அரக்கது கோஉட்டம் வளமான வாலுளுவை சோம்பு ஏலம்
கூரே நீ சாதிக்காய் மிளகு சீரகங் குணமான கார்போக மாசிக்காயே.

7. காயான தேசாவரம் வாய்விளங்கம் கனிவசம்பு லவங்கமுடன் பறங்கிப் பட்டை
தாயான செங்கொட்டை கடுக்காய்த் தோலும் நயவான கருஞ்சீரகங் காட்டுச் சீரம்
பாயான சிறுதேக்கு தாளிசபத்திரி பண்பாக முந்திரிகை பிரம்பின் மூலம்
வாயான எட்டிவிரை தேத்தான் வித்து வளமான நீர்ப் புண்டு எள்ளுமாமே.

8. ஆமே நற்கொள்ளுடனே தேங்காய் கூட அடவான சின்னி வேர் சங்கன் வேரும்
நாமே நீ அமுக்கரா கொல்லன் கோவை நயவான கொடுவேலி மூலத்தோடு
வாமே நீ வகை வகைக்கு விராகனென்று வளமான கோழிமுட்டை ரெண்டு வாரு
போமே நீ யிவை யெல்லாம் பொடியாய்ச் செய்து பொங்குமுடன் கல்வுரலில்
போட்டுக் குத்தே.

9. குத்தப்பா இது நேரே பனவெல்லந் தான் குணமாக நால் சாமம் யிடித்து நமுரு
பெத்தப்பா வழித்தெடுத்து சிமிளில் வைத்து பேதயில் லை சுண்டைக்காய் வீதங் கொள்ளு
முத்தப்பா மோருஞ் சோறுண்டு முன்னே முசியாமல் மருந்துண்ணு மண்டலந் தான்
சித்தப்பா முழுது நாள் மருந்துண்ணுதே சிறப்பாகப் பத்தியந் தானில்லை தானே.

<u>வாதசூலை</u>:-

10. தானென்ற வெடிசூலை மேகசூலை நயவான குடிசூலை புறடைக்குஞ் சூலை
வானென்ற நடிசூலை வாதசூலை வளமான கால் முடைச்சல் கறனை தீரும்
மானென்ற ஆப்பு விப்புருதி மாலை மதியாத குஉட்டமொடு விஉ நீர் தீரும்
கோனென்ற குறை நோயுஞ் சிரங்குந் தீரும் குணமான புழுவெட்டு கடிப்பும்
போமே.

11. குறை நோய்கள் கால் விரல்கள் கை விரல்கள் குறைகிற பதினெட்டு குஷ்டத்தி
லொன்று)
போமே நீ யோனி தன்னில் பொலிவான ஆமையடி சிலந்தி மேகம்
தாமே நீ செங்கிரந்தி கருங்கிரந்தி நயவான அரிகிரந்தி பொரிகிரந்தி
வாமே நீ பருகிரந்தி யிடி கிரந்தி வளமான இடி விழுந்து புரை மேற் புண்ணு
ஆமே நீ அரை கடியுந் தண்டிற் புண்ணு அடவான குள்ளி மாதேவியாமே.

12. ஆமே நீ நடைவாளை முட்டுவாளை அடவான குழிவாளை முருகு வாளை
சேமே நீ புழுவான விலாவில் வாழை செயலான தமர்க்காய்ச் சிலந்தியோடு
ஓமே நீ குறிப்புற்று யோனிப்புற்று ஒளிவான இடிபுற்று கன்னப்புற்று
தாமே நீ பல்ச் சிலந்தி கன்னத் தோசை சதை வளரும் கண்ணோசை போகும்பாரே.

13. (தமர் காயாச் சிலந்தி நூலையாருச் சிலந்தி)
பாரடா பிளவையொடு பிளவைப் பூச்சி பளியான ராசனென்ற பிளவையோடு
கூரடா நேத்திர மேல் பிளவையோடு கொடி நூ நடிச் சிலந்தியோடு
நேரடா பவுத்திரங்கள் மூளை மூலங்கள் நெடிய பதமெட்டுச் சக்கத்திறுடு
வீரடா இவைகளெல்லாந் தீருந் தீரும் விதமாகப் போகருட கடாட்சந் தானே.

14. <u>புலிப்பாணி: மேத்தலை வியாதிக்கெண்ணை</u>:-
போமே நான் மேத்தலையின் வியாதி தீர பொங்குமுடன் எள்ளெண்ணை படிதானென்று
தாமே தான் பசுவின் பால் படி தானென்று நயவாக கம்பஞ் சோற்றின் நீரை
விட்டு
வேமே தானு தொண்டை யிலையைத் தானும் விதமாகத் தான் நசுவைத்துச் சாறு
நாறி
வர்மே தான் மிளகுவும் பலந்தான் ரெண்டு வளமாகத் தாமுடைத்துப் போட்டி
டாயே.

15. போட்டதொரு மிளகுவு மிதக்க மிட்டும் பொங்குமுடன் அக்கினியி லெரிக்க வேண்
டும்
நாட்டவே யிறக்கி வைத்து வடித்துக்கு கொண்டு நலமான மிளகுதனை யரைத்துக்
கூட்டு
ஊட்டவே உதையாதி நடங்கு முன்னே உத்தமனே தலை முழுகி யமுது கொள்ள
காட்டவே மண்டையிடி கண்ணுக்குத்து காலமே முழுகி வர வோடிப் போமே.

<u>புலிப்பாணி பீனிசத்துக்கு நசியம்</u>:-

16. வீரந் தானினமொருவுபாயங் கேரு விதமான மாதளம் பூ எருக்கம் பூவுங்
காரந்தான் குங்குமப்பு மூன்று நேராய்க் கல்வத்திலாட்டி யிதை முலைப்பால்
விட்டு
சோரந் தானில்லாமல் நாசியிலே பிழியச் சோரியென்ற பீனிசந்தானேழுந் தீரும்
பாரந் தானில்லையப்பா சூக்ஷமாகப் பாடினேன் புலிப்பாணி விளங்கத்தானே.

<u>லிங்கக் கட்டு செந்தூரம்</u>:-

லிங்கம் விராகனிடை. 2½, எலுமிச்சம் பழச் சாறு படி. ½-ல் செம்பரத்தை
பூ5 கட்டி பிசைந்து அந்த நீரை சுருக்கு கொடுத்து எடுத்து அல்லது சுத்தியாகாத
வேறு லிங்கம் ஆவது விராகனிடை. 2, எடுத்து ஒரு அயக் கரண்டியில் போட்டு
பொடித்து மேற்படி கரண்டியில் கொஞ்சம்

கொஞ்சமாக விட்டு உருகிற சமயத்தில் லிங்க கட்டி யிட்டு பிறட்டி பிறட்டி யெடுத்து மேற்படி லிங்கத்துக்கு முன் கரண்டியிலிருக்கிற தாள் கூடக் கூட்டி பொடி செய்து பழச்சாறு விட்டரைத்து லிங்கக் கட்டிக்கு ரெண்டு வால் அல்லது $1\frac{1}{2}$ விரல் கனத்தில் கவசங் கட்டி புடம் பண்ணி சுத்த ஜலம் விட்டரைத்து விரல் கனத்தில் குகை பண்ணிப் பொதிந்து சீலை ஏழு செய்து உணர்த்தி ஒரு விருட்டி எருப்பிடமிட்டு எடுத்துக் கொள்ளவும்.

<u>பூரண சந்திராதி:-</u>

<u>புலிப்பாணி கெந்தக ரசாயனம்:-</u>

ஆமே நீ கெந்தகத்தின் ரசாயனந்தான் யடவாகச் சொல்லுகிறேன் நன்ருய்க் கேளு
தாமே நீ திரிகடுகு கிராம்பு யேலந் தனிலவங்கப் பட்டையுடன் லவங்கப் பத்திரி
வாமே நீ சாதிக்காய் தாளிச பத்திரி வளமான சிறுநாகப்பூவினோடு
போமே நீராமிச்சம் ஓமம் பெருஞ்சீரகம் குருசாணியாமே. ௧

2. ஆமடா சித்தரத்தை சித்திர மூலம் அடவான திப்பிலிதன் மூலத்தோடு
நாமே நீர் பூலாக் கிழங்கு ஆனைத் திப்பிலி நலமான கருஞ்சீரகம் சுகை நீரும்
தாமே நீ முந்திரிகை சந்தனம் கார்கோலம் தயவான அதிமதுரம் முத்தக் காசு
வாமடா சடாமாஞ்சி கொத்தமல்லி வளமான பேரீத்தம் பழமுமாமே.

3. ஆமே நீ திரிபாலை சாதிபத்திரி அடவான வெட்டிவேர் குங்குமப்பூ
தாமே நீ நிலப்பனை வேர் அசுவ கெந்தி தயவான நெருஞ்சி முள்ளு நீர்முள்ளி வித்து
வாமே நீ பூனையென்ற காலிவித்து வளமாக வகை வகைக்கு விராகன் நாலு
போமே நீ நிறுத்தெடுத்துப் பொடியாய்ச் செய்து பொங்கமுடன் சுளி கெந்தி பலமு நாலே.

4. நாலான பறங்கிப் பட்டை பாலில் சுத்தி நாயகனே தாள் பலமிருபதாக
பாலான சக்கரை தான் அப்பா கேளு பாங்காகப் பலமது தானிருபதாக
கோலான சீந்தி சர்க்கரை தானப்பா கொத்தவனே பலமது தான் பத்தாகும்
மேலான நீர்மிட்டான் கிழங்குச் சாறு விதமாகப் படியாறு பாண்டத்திட்டு
சேலான பசுவின் நெய் படிதானென்று சிறப்பான தேன் படி தானென்று கூட்டே.

5. கூட்டப்பா பாகது போல் பதத்தைப் பார்த்து கொத்தவனே யிறக்கி வைத்துப் பொடியைப் போட்டு
ஆட்டப்பா கிளறியதை யெடுத்துக் கொண்டு அப்பனே கலசந் தன்னில் வைத்து
நாட்டப்பா நெல்ப் புடம் பத்து நாள் தான் நலமாகத் தான் வைத்து எடுத்துக்கொண்டு
ஊட்டப்பா களச்சிக்காய் வீதங் கொள்ளு உத்தமனே தீரு நோய் விபரங் கேளே.

6. கேளு நீ வாதமது யென்பதுக்கும் கொடியான பித்தமது நாற்பதுக்கும்
சூளு நீ கிறிச்சனங்களாறுக்குந் தான் சுகமில்லாக் கிரந்தி பதினெட்டுச் சூலை
நாளே நீ குன்மமொடு பாண்டுசோகை நயமில்லாச் சயரோகம் மேகமெல்லாம்
வாளே நீ யக்கினியின் மந்தந் தீரும் வளமான பருதி கண்ட யிருள் போல் போமே.

7. போமடா பத்து நாள் கொண்ட பின்பு பொலிவான பத்தியந்தான் சொல்லக் கேளு
ஆமடா பசும் பயறு துவரையாகும் அப்பனே தூதுவளை மணித்தக்காளி
தாமடா கத்திரிக்காய் முருங்கைப் பிஞ்சு தயவான கோவை பில்லிக் கீரையாகும்
வாமடா புளியுப்பும் பசுவின் நெய்யும் வளமான மோர் தயிரும் பாலுமாமே.

<u>வெள்வங்க பற்பம்:-</u>

1. பாரப்பா யின்னமொரு பற்பங் கேளு பாங்கான வாலை ரசங் களஞ்சி மூன்று
நேரப்பா அந்திடைக்கு வெள்ளை வங்கந்தான் சுத்தி பெற நேர்த்திந்து கல்வத்திட்டு
சாரப்பா கற்பூர சலாசத்து தானுந் தயவாகக் களஞ்சியது மூன்றுங் கூட்டி
காரப்பா அரைத்திடுவாய் சுண்ணாம்பு நீரால் கருவாக வில்லையது தட்டிப் போடே.

2. காய்ந்த பின்பு ஓட்டிலிட்டு சீலை செய்து கருணையுடன் அன்பதெரு புடத்தைப்போடு
ஆய்ந்து நன்று யாறிய பின்னெடுத்து மைந்தா யப்பனே மூன்னீரால் ரெண்டு சாமம்
பாய நன்று யரைத்து வில்லை ரவியில் போடு பாங்கான ஓட்டிலிட்டு சீலை மண் செய்
ஆய்ந்து விடு அன்பதெரு புடத்துக்குள்ளே மல்லிகைப் பூ நிறம் போலே வெள்ளையாமே.

3. வெண்மையென்ற வெள் வங்க பற்பந் தன்னை விதமாகப் பணவிடை தானருபானங் கேள்
~~வெண்மையென்ற மாதளம்பு நன்மையுள்ள சீரக மல்வீதம் கூட்டி நலமான குரணந்தான் பணவிடை தரு~~
வெண்மையென்ற மாதளம்பூ விதள் தானப்பா மாற்கமுடன் ரெண்டு பலம் நிழலுணர்த்தி
நன்மையுள்ள சீரக மல்வீதம் கூட்டி நலமான குரணந்தான் பணவிடை தானுங் கூட்டி
உண்மையுள்ள பசுவின் நெய்யில் ரெண்டு வேளை உண்டிடவே மண்டலத்தில் உள் நோய்தான்.

4. உள்மூலம், வெளிமூலம், ரெத்த மூலம், உண்மையுள்ள மேக நோய், யெலும்புருக்கி,
வெண்மூலம், சீமூலம், யேகமூலம், விதமான களிமூலம், பித்த மூலம்;
நவமூல மொன்பதுமே தீர்ந்து நல்ல நாடிகளுந் தான் வலுத்து தாது உண்டாம்
வெள் வங்க பற்பமடா பத்தியந்தான் வேண்டாம் விதமாக உளுந்து மோர் பச்சை பூசனிக் காய் நீக்கே.

****
முற்றும்
****

சு.ச: 6.4.64.

Verification and comparing completed
Sundaram
2/1/65